173

உ
கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. க. } சௌமிய௵ ஐப்பசி௴ { பகுதி எ.

செய்ந்நன்றியறிதல்.

"செய்ந்நன்றியறிதல்" என்பது "ஒருவன் தான்பிறர்க்குச் செய்யத்தக்க நன்றியை யறிதல்" எனவும், "பிறர் தனக்குச்செய்த நன்றியையறிதல்" எனவும் இருபொருள்தோற்றுவிப்பதாகும். இவற்றுள் ஒவ்வொன்றும் மானிடஜன்மமெடுத்த எல்லாருக்கும் இம்மை மறுமை யிரண்டற்குந் துணைசெய்யத்தக்க ஒப்புயர்வில்லாத திப்பிய அறமாமென்பது எப்புலவர்களும் ஒப்ப முடிந்ததாம்.

தான் நன்மை செய்தலாவது, பசி பிணியாதியவற்றால் பிறர் வருந்தக் காணினும் கேட்கினும் தானேவிரைந்து அவர் துன்பத்தை நீக்கி மனமொழி மெய்களா லியன்ற உபகாரம் செய்தல் என்பது. இங்ஙனம் உபகரிக்குங்கால் அவ்வுதவியைப் பெறுவார் துயரத்தைக் கண்டு, "மனமிரக்கமுற்று" இவ்வுதவியை யிதுபொழுது இவர்க்குயாம் செய்யப்பெற்றேம்" என்று மகிழ்ச்சி யடைந்து, முகமலர்ச்சியுடன் இனிய மொழி கூறி, அன்னம் ஆடை முதலியவற்றை அளித்தல் ஆதியவாக ஏற்றவற்றைக் காலந்தாழாது செய்துமுடிக்க வேண்டும்.

கொலைகளவாதிய தீச்செயல் புரிவாரைக் கண்டால், அந்தோ! இக்கொடுஞ் செயலால் இவர் மீளாநரகிற்கு ஆளாகுவரே! என்று உள்ளங்கசிந்து, அக்கொடுந் தொழிலால்வருந் தீங்குகளை எடுத்துக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதிகாரம் முதலியவற்

றால் செல்வாக்குப்படைத்திருப்பின் தன்வாக்குச் சகாயத்தாலும், செல்வம்படைத்திருப்பின் பொருள்வகையாலும், சரீரவலியிருப்பின் உடல்முயற்சியாலும் பிறர்க்கு உதவிசெய்வதை யாவரும் மேற்கொள்ளவேண்டும். இதனை

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

என்னுந் தேவர் திருவாக்கு வலியுறுத்துமாறுகாண்க.

இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பிறருதவி கொண்டு சுகவாழ்க்கை யடையவேண்டுமேயன்றிப் பிறருதவியில்லாமல் வாழ முடியாது. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றையே செய்து பிறர்க்கு உதவிசெய்யா திருந்தால், உலகமே நடை பெறாது. இதுநம் அநுபவத்தால் யாவரும் அறிந்துள்ளதேயாம்.

தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே
உண்டா லம்ம இவ்வுலகம்!

என்னும் புறப்பாட்டை நோக்குமிடத்து எந்தமுயற்சியும் தன்பொருட்டாக மட்டுஞ்செய்யாது பிறர்க் குதவியாகும் பொருட்டுச் செய்வார் இருத்தலாற்றான், இவ்வுலகம் நிலைபெற்றுள தாகின்றது என்பது இதன்கருத்தாம். ஆகவே, ஒவ்வொருவரும் பிறர்க்குதவிசெய்யக் கடமைப் பட்டிருப்பதை யறியவேண்டும். இந்தஉபகாரகுணம் வளர வளர, தனக்குவேண்டும்! தனக்குவேண்டும்! என்கிற பற்று முற்றும் அற்றுவிடும். பற்றற்றொழிபவே பிறவுயிர்களையும் தம்முயிராகக் கருதும் அன்பு மேலிட்டு அருள்பெருகுவதாகும். உயர்ந்தவர் மாட்டு அன்பும் தாழ்ந்தவர்மாட்டு அருளும் உடையராயவழி, மனந்தூய்மை யெய்தும். மனத்தூய்மையால் புண்ணியம்பெருகி மோக்ஷமும் சித்திப்பதாகும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றமுதியோர் வாக்குப் பிரத்தியக்ஷப் படுவதாகும்.

இவற்றை யெல்லாம் கருதாது எல்லாப் பொருளையும் தனக்கென ஈட்டிப் பிறர்க்குதவி செய்யாராயின், அவரது அவாவே அவரது அறிவைக் கொன்று புண்ணியபாவ உணர்ச்சியை மறைத்து

மேலுமேலும் பிறவிக்கேதுவாகிநிற்கும். உலகத்தாரும் அவர்களை நடைப்பிணமாகக் கருதியிகழ்வர். அவர்க்கு மனத்தூய்மை வருவதுமில்லை.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்பவாகலின், அவாவுடையார் ஒருபொழுதும் மனச்சாந்தி பெறமாட்டார் பரோபகார தருமமானது இம்மையிற் புகழ்கொடுப்பதுடன் நில்லாது மறுமையில் வீட்டிக்கும் ஏதுவாகக் கூறப்படுதலின் இதையொத்ததோர் அறச்செயல் எதுவுமில்லையென்க.

அற்றேல், "பொருளாலேனும்வாக்காலேனும் காயத்தாலேனும் உதவிசெய்யச் சக்தியற்றவர்க்குப் புகழும் புண்ணியமுமில்லையாமோ?" என்னின், அற்றன்று.

'இசையா வொருபொருளை யில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை.........'

'ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே'

என்பவாகலின், இயலாதார், இயற்றுவிடத்துத் தீமையில்லை. உடையார் செய்யாக்காற்றான் தீமையாகும்."

ஆயின், "இயலாதார் நன்மைசெய்வதெவற்றாலெனதாம்?" என்னில், அவர் செய்யற்பால நலமுமுண்டு. அன்னோர் பிறர்க்குத் துன்பஞ்செய்யாதிருத்தலே பெரியதோர் நன்றியாம்: பறவைகளைச்சிறைசெய்தலும், நாய் கழுதை முதலியவற்றைக் காரணமின்றி சுத்தவிளையாட்டுத்தனத்திற்காகவேவைதயப்புடைத்தலும், எளியார்க்குநலிவுறுத்தலும், இரப்போரை ஏசுதலும் இன்னோரன்னபலவகையான தீச்செயல் செய்கின்றவர்கள் எத்தனைபேருள்ளார்? பயனற்ற விளையாட்டிடத்து இன்னசெய்தலேயன்றியும் அற்பப்பொருள்முதலியவற்றின் வேட்கையால் கொலை களவாதிய செய்கின்ற கொடும்பாதகர் எத்தனைபேருள்ளார்? எவ்வாற்றானும் பிறர்க்குச் சிறிதும் இடுக்கண் செய்யாதி வாழ்தலே மிக்கநன்றியாம். இதுபற்றியன்றே

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின். அதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா றதுவே"

எனத் தமிழ்ப்புலவர் பெருமக்களும் "பிறரை வருத்தாமையே பெரும்புண்ணியம்" என்ற பொருளை விளக்கி "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்று வடமொழிவல்லாரும் கூறிச்செல்வாராயினர். ஆகவே, இயல்பவர் யாவரும் பிறர்க்குஉதவிசெய்தலும் இயலாதார்பிறர்க்குத் தீங்கியற்றாமையும் ஆகிய இவ்விரண்டுமே முதற்கட்கூறியபடி தான் செய்நன்றியாம்.

இதை மூன்றுவகைப்படுத்துரைப்பாருமுளர். அவையாவன:— (1) ஒருவர் வருத்தங்கண்டவுடன் மனமிரங்கித் தாமே வலியச் சென்றுதவுதல் தலையாய நன்றி (2) வருந்துவார்வந்து கேட்டபின் உதவுதல் இடையாயநன்றி (3) கேட்டபின்னும் மனமிரக்கமின்றி அலைப்புறுத்தி வெறுப்பொடுசெய்யுமுதவி கடையாயநன்றி. (இவை யாவும் பெறுவார்க்குத் துன்பந்துடைத்து இன்பம்பெருக்குவனவே யாதலின் நன்றியாகவேயமைவனவாம்.)

அன்றியும் (1) இரக்கங்காரணமாகச் செய்தல் (2) முன் தமக்குச்செய்த நன்றி காரணமாகச்செய்தல் (3) பின்தமக்குவரும் நலங்காரணமாகச் செய்தல் என்று நன்றியை மூன்றுவகுப்பாக்கி யுரைத்தலுமுண்டு. "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்பவாகலின் விதித்தன செய்யலும் விலக்கியவை செய்யாமையும் ஆகிய இரண்டும் ஒவ்வொருவனும் தான் செய்நன்றியென்று துணிந்துகொள்ளத் தகும்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

அன்னையும் பிதாவும்.

(166-ம்பக்கத்தொடர்ச்சி.)

கோவணத்திற்குங்கூட விதியற்றும், எவ்வகை ஆதரவின்றியும், அறிவில்லாமலும், பலவீனராயும் பிறந்த நம்மை ஈமொய்க்காமலும், எறும்புகடியாமலும், வெயிற்படாமலும், காற்றுவீசாமலும், பனிஅடியாமலும், மழைவிழாமலும், மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் அணைத்துக் கண்ணை இமை காப்பதுபோற் காத்தவள் அன்னையே. முகத்தோடு முகம்வைத்து முத்தாடிக் களித்தவளும், நம் சுகத்தை நாடி மருந்தூட்டி அழுகைமாற்றித் தொட்டிலிட்டுத் தாலாட்டி உறக்கி மகிழ்ந்தவளும், நாம் பசித்து அழும்போதெல்லாம் பால்தந்து திருப்திகொண்டவளும் அன்னையே. இம்மட்டோ? நம் மூக்குச்சிந்தி நீராட்டி ஈரம் புலர்த்தி நாசிஊதி செவிஉருவிக் கைகால் குலுக்கி விழிக்கு மைதீட்டி கன்னங்கிள்ளி உச்சிமோந்து உவகைகூர்ந்தவளும், உரியகாலத்தில் அமுது அருந்தப் பழக்கிக் கொஞ்சங்கொஞ்சமாகப் பால்குடியைமறப்பித்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து இன்பார்ந்தவளும் அன்னையே யன்றோ?

நாம் அழ அவள் சம்மதியாள். நாம் பிணிகளால் துன்புறுதலைக் காணவும் சகிக்கமாட்டாள். நாம் சுகமுறத் தான் மருந்துண்டு பத்தியங்காப்பாள். கடவுளைப் பிரார்த்திப்பாள்; விரதம்இருப்பாள்; மாதாந்தம் நடப்பாள்; காணிக்கைகள் நேர்ந்துகொள்வாள்; அப்படியே செலுத்தும்படி நமது ஐயனையும் வேண்டிக்கொள்வாள். கவலையீனராய் விளையாட நாம் வெளியே சென்றால் நம்மைப் பின்தொடர்ந்து பற்றி எடுத்துக்கொண்டுவருவாள். நம்முடைய தேகத்தில் புழுதிகள் படிந்திருக்கக்கண்டால் தண்ணீராகாதென்று வெந்நீரிற் குளிப்பாட்டுவாள்; நாம் பராமுகமாக 'உண்ணமாட்டேன்' என்றால் காக்கையைக் கூவியோ மற்றொரு போக்கைக் காட்டியோ நம்மை யுண்பிப்பாள். நம்மைச் சந்தோஷிப்பதில் அவளுக்குச் சந்தோஷமிருக்கும். நம்முடைய அறிவின் அபிவிர்த்தியே அவளுக்குத் திருப்தியைக் கொடுக்கும். நிற்க.

பிறந்தவுடன் மிருகங்கள்கூட நடமாடவும், பால்குடிக்கவும், கூடியசீக்கிரத்தில் புல்முதலியன தின்னவும் பழகிக்கொள்ளுகின்றன. இம்மிருகசாமர்த்தியங்கூட இல்லாத ஓர் நிலைமையில்தான் நாமிருந்திருக்கிறோம். அத்தகைய நமக்கு அன்னையின் உதவி யில்லையேயானால் நம்முடைய கதி அதோகதிதான். ஆனதுபற்றியேதான் அன்னையை முன்வைத்தனர் என்னலாம். எப்படியானாலுஞ்சரியே. ஈசுவரனையே நோக்கி "அன்னையோப்பாய்" என்றதோர் உண்மையால் தாயினிடத்துள்ள பெருங்கருணை வெளிப்படை. தெய்வம் தாயின்வழித்தாய் நம்மைஇரட்சித்து வருகிறகருணையே அறக்கருணையாம். அதுகொண்டே யெவரும்வாட்டமுறுவது கண்டால், "தாயில் மகவையும், மழையில் பயிரையும்" உவமிப்பது உலக வழக்கு. இவை நிற்க.

பிதாவோ நம்மிடத்துச் சேட்டைகள் உண்டாகிவிடாமல் நம்மைச் சிட்சித்துத் தடுத்தாளுகிறவராய் இருக்கிறார்.

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்"

என்றபடி அவர் நாம் கெட்டபிள்ளைகளுடன் கூடி ஆடக்கண்டால் தடுப்பர். நாம் இடறிவிழும்படி திரியக்கண்டால் வெடுவெடுப்பர். பள்ளிக்கூடத்திற்குப் போகமாட்டோமென்றால் நம்மைக்கண்டித்து அங்குக் கொண்டுபோய்விடுவர். நம் சகோதரருடன் சண்டைபோட்டுக்கொண்டால் நம்மைத் தண்டித்துச் சமாதானப்படுத்தியும், குறளையும் பொய்யும் கூறக்கண்டால் நம்மைக் கடிந்துகொள்ளவுஞ்செய்வர், நாம் தேடியபொருளை வீணிற்செலவழிக்க அவர் சம்மதியார். சீட்டாடுதல் முதலியவற்றிலும், சோம்பித்திரிவதிலும் நாம் வீண்பொழுது போக்குவது அவர்க்கு வெறுப்பாகவேஇருக்கும். அவர்மட்டும் கவனியாவிடின் துர்இச்சைகளும் துர்ச்செயல்களுமே ஓர் உருவாகக் காணப்படுகின்ற மாயாசாலங்கள் நம்மைக் கெடுத்துவிடும். இக்கேட்டுக்குள்ளாகாதபடி அவர் நம்மைச் சிட்சிப்பதெல்லாம் நம்மைத் தடுத்தாள்கிறதாகவே இருக்கும். ஆனதுபற்றியே,

"அன்றலிற் றுயில்மாலும் அண்டருமந் தரமலையிட்
டலைவ தாக்கி

நின்றாலுந் தன்வருத்தம் நினையாத பாற்கடலின்
நீர்மை போலக்

கொன்றாலும் அழலெழத்திக் கொளுத்தினுஞ்சிற் றரிவாளாற்
கொய்து கொய்து

தின்றாலும் மறந்தேனும் தீங்குதந்தைக் கிழையாதென்
சிந்தை என்றான்"

என்று பிரபோதசந்திரோதயம் கூறிற்று.

ஆகவே மதியூகிகளுக்குப் பிதாவின் கடுகடுப்பெல்லாம் நம்முடைய நன்மையை நாடினதாகவே காணப்படும். தெய்வம் தந்தையின் வழித்தாய் நம்மை இரட்சிப்பதையும் மறக்கருணைஎன்னலாம்.

"இங்ஙனம் 'அறக்கருணை, மறக்கருணை' என்று கருணை இருதிறப்பட்டிருத்தலால், பெற்றோர் அருட்டன்மையில் ஒருமையினரென்பது எப்படியாகும்?" எனின், "கருணை ஒன்றுதானே தன் இயல்பில் அறக்கருணையென்றும், நம்மிடத்தில் காணப்படும் சேட்டைகளை ஒழிக்குங்கால் மறக்கருணையென்றும் வழங்கப்படுதலின்றி இருதிறத்தன அல்ல" வென்க. "அப்படியானால் ஈண்டு மறக்கருணையை உணர்த்துவான் எடுத்துக்காட்டிய மேற்கோளில், தந்தை தாய் என்று இருவரையும் வைத்தது என்னை?" எனின், "அது தந்தை தண்டிக்கும்போது தந்தை ஆணையின்கீழ் அடங்கிநிற்கும் தாய் சகித்திருந்து சம்மதிப்பதுபற்றி என்க. இதுவும் வேண்டியது என்பதற்கு "உறுக்கிவளர்க்காத பிள்ளையும், முறுக்கிவளர்க்காத மீசையும் ஒழுங்குபடாது" என்ற பழமொழியே சாட்சியாம். இதுகொண்டு தந்தை, தாயினும் குறைந்தவராகார். "மைந்தர் தமை நெஞ்சில்" என்றபடி பிள்ளைகளை ஒடுக்கிவளர்க்கிற தந்தை அகத்தே கருணைமயமாகவே இருக்கின்றனர் என்பதைமேல்வரும் விஷயங்களைக் கொண்டு அறிக. (இன்னும் வரும்)

த. ஆறுமுகநயினார்பிள்ளை.

* காலாந்தகனார் கடைப்பெறு வெற்றி.

பிறப்பினாற் பிறங்கும் பேறும் பீடுறு நிலையால் மேவும்
சிறப்பும்ஓர் மித்தை அல்லால் சிறிதும்மெய்ப் பொருளே ஆகா.
குறித்திடில் விதிக்கு மாறாக் கொள்ளுமெய்க் கவசம் இன்றே:
இறப்பு மன் னவர்கள்மேலும் இரக்கம்இல் கைவைத் தீர்க்கும். (1)

சீர்திகழ் மகுடம் பூண்டு திசைஎலாம் செங்கோல் ஓச்சும்
தார்புனை அரசர் தாமும் தம்நிலை நின்றும் சாய்ந்து
கூர்வளை வாள்மண் வெட்டி கொண்டகீழ் மக்க ளேபோல்
பார்மிசை மண்ணே ஆதல் பரமநிச் சயமே அன்றோ? (2)

ஒருசிலர் தங்கள் கையில் உற்றவாட் படையை ஏந்திக்
கருதலர் தம்மை யுத்த களத்தினிற் கொன்றிட் டாக்கு
மருவுறு வாகை நாட்டும் மாண்பின ரெனும், அன்னோரும்
பெருவலி இழந்து சாவு பெறுவது சரதம் தானே. (3)

ஒருவரை ஒருவர் வெல்வர். (உறுவினை வெல்வார் யாரே?)
இருவரும் முன்னோ பின்னோ இருவிதி வசப்பட் டோராய்ப்
பிரியவே பிரிய மற்றுப் பேணிய சீவன் தன்னை
வெருவிமெய் வெளுத்துச் சாகும் வேளையில் விடுதல் திண்ணம். (4)

மற்றுநின் தலையிற் சூடும் வாகையும் வாடிப் போமால்
செற்றலர் தமைவெல் வீரச் செய்கையாற் செருக்கே கொள்ளேல்.
கொற்றமார் வீரன் கூற்றின் குருதிதோய் பலிபீ டத்தில்
அற்றசென் னியனாச் செந்நீர் அமிழ்ந்திடல் அந்தோ! காண்மின். ()

எத்தகை யோரா னாலும் இறுதியில் இடுகா டெய்தல்
சத்தியம் நீதி மான்கள் சற்கரு மங்க ளேதாம்
இத்தரைக் கண்ணே மிக்க இன்மணத் துடனே பூத்து
நித்திய மாக ஓங்கி நிற்பதாம் நினையுங் காலே. (6)

ம. கோபாலகிருஷ்ணையர்.

---

* இது ஜேம்ஸ் ஷர்லி என்ற மேற்றிசைப்புலவர் பாடிய "Death's Final Conquest" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு.

சிந்திக்காது வாணளை வீணாளாக்குகின்றனர். அந்தோ! அந்தகன் கையிலகப்பட்டு வீணுய்அழிந்து கெடுவதழகாமோ? தினந்தோறும், பள்ளியில் கல்விபயிலும் மாணுக்கராயிருந்தாலுஞ்சரி, ஆசிரியரா யிருந்தாலுஞ்சரி, 'வக்கிற்'றெழிற் பூண்டோராயினுஞ்சரி, உத்தியோ கஞ் செய்பவராயினுஞ்சரி, உரைசால் மன்னராயினுஞ்சரி, ஏனைய வினையாளராயினுஞ்சரி, கணப்பொழுதாயினும் ஈசனடி துதிக்கிற் பல னுண்டாமே. சிற்றின்பத்தின்மூழ்கி பாடுபட்டுழைக்கும் மதியிலிகள் பேரின்பமளிக்கும் இறைவனடியைத் தியானஞ்செய்து என்றும் இன் புற்றிருக்க ஏன்காலதாமதஞ் செய்தல்வேண்டும்? சிலர்தேவாலயங் களுக்கு விசேஷதினங்களிற் கூடச்சென்றுதுதிக்க அவகாசமில்லை யெனக்கூறுகின்றனர். அன்னவர் அற்றைக்கு அரைக்காசு வருவாய் இருப்பின் "இற்றைக்கு அவகாசமில்லை"யென்றுகூறத்துணிவாரோ? தேவர்கோன் சுவர்க்கலோகத்திலே மந்தாரநிழலிலே சுதர்மையென்னும் தேவசபையிலே முப்பத்துமுக்கோடி தேவருஞ்சேவிப்ப இரத்தின சிங்காதனத்தின்மேல் சிறப்புடன்வீற்றிருந்து தேவப்பெண்களின் நிருத்தத்தையும் கீதத்தையும் கண்ணுற்கண்டும், செவியாற்கேட்டும் களிமதுக்கடலிலாழ்ந் திருக்கையில் பிருகஸ்பதி பகவான் வர,

> 'மேலோ ராயினு நூலோ ராயினும்
> பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
> பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங்
> கணிகையர் வாழ்க்கை கடையே போன்மென'

என்று சிலப்பதிகாரங் கூறுங்கட்டுரையை இந்திரன் கவனியாது பெண்மயலில் மயக்குண்டு, இருக்கைவிட்டெழுந்து வந்தனை வழிபாடு செய்யாது வாளாவிருந்தான். உடனே பிருகஸ்பதி பகவான்ஒல்லென வேக இந்திரன்செல்வங் குறையவாரம்பித்தது. பின்னர் அவரைவழி பாடு செய்யாததினுல் விளைந்தகேடென்று அறிந்து துக்கமுற்றுன்.

நக்கீரதேவர் ஒருதடாகத்தின்மூழ்கி சிவபூஜைசெய்து கொண் டிருக்கையில் ஓர்ஆலமரத்தினின்றும் ஒருபழுப்புஅவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி நீர்ப்புறத்திலுமாக விழ, நீரிலேவிழுந்தபாதி மீன் வடிவமும், நீர்ப்புறத்து விழுந்தபாதி பறவை வடிவமு மடைந்து இரு பக்கத்திலுமிழுக்க இவர் இவ்வாச்சரியமான காரியத்திற் கருத்தைச்

செலுத்தினர். இவ்வாறு சிவபூசையில் வழுவினதொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒருமலைக்குகையில் அடைத்துஇன் னும் ஒருவன் வேண்டுமெனக்காத்திருந்த ஓர் பூதம் நக்கீரரையெ டுத்துக்கொண்டு சென்றுஅக்குகையிலடைத்து உண்ணநீராடப்போ யிற்று.

முன்னடைபட்டிருந்த யாவரும்இவரால் இறக்குங்கால நெருங் கிற்றென்றழுதனர். அதுகண்டு நக்கீரதேவர், திருமுருகாற்றுப்படை பாடினவுடனே முருகக்கடவுள் எதிர்வந்துஎல்லோரையுங்காப்பாற்றி யருளினர். இவ்வாபத்தினின்றும் நீங்கினது,கடவுள் தியானத்தின லன்றோ?

அன்றியும், நாம் ஓரிடத்தில் உல்லாசமாக வீற்றிருக்குங்கால் நம்மினும் மேலோர்வரின் இருக்கைவிட்டெழுந்து மரியாதைசெய்கி றோமென்பதை எவரும் மறுக்கார். இதனோக்கம் என்னவெனின், அவர்நம்மீது கெட்டவபிப்பிராயம் பூண்டால்,நமக்குக்கெடுதியென்ற எண்ணமேயொழிய வேறில்லை. மனிதர்களிடத்திலே நல்லபிப்பிரா யஞ் சம்பாதிக்குமியல்புடைய நாம், இகபரம் இரண்டுக்கும் உற்ற துணையாயிருக்கிற சாக்ஷாத் கடவுளின் நல்லபிப்பிராயத்தைப் பெற் றுவிடின் நமக்குக்கைகூடாத காரியமும் உண்டோ? இல்லை.

ஆகையால், நாமடைந்திருக்கிற யாக்கையின்பயனாக நாம் கட வுளைத் தியானஞ்செய்து பெருஞ்சீரெய்தல் வேண்டும்.

பு. து. இரத்தினம் பிள்ளை.

1853

தேவாரம்.

தேவாரம் என்பது கடவுளுக்குரிய மாலை எனப்பொருள்படும் அதாவது கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால் வகைப்பூவினை நாரால்தொடுத்து நாதற்குச் சூட்டுவதோர் பூமாலை போல, பெயர், வினை, இடை, உரி என்னும் அவ்வகைச்சொற்களை அன்பாற்றொடுத்து அடியவரால் சூட்டப்படு மினியபாமாலையென்ப தாம்.

இதனைத் தே+வாரம் எனப்பிரித்துத் தெய்வத்தைவாரத்தாற் பாடும் பாட்டாதலினன்றே தேவாரம் என்று ஆயிற்றென்பாரும், தேவ+ஆரம் எனப்பிரித்துக் கடவுளுக்குரிய மாலையாதலின் அங்ஙனமாயிற்றென்பாரும், தேவ+அர்ஹம் என்னும் வடமொழித்திரிபே அவ்வாறாயிற்றென்பாருமாகப் பலர் உளர்.

திருமுலையமுதுண்டு குருவருணிலைகண்டு பொற்றாளம் பெற்றுப் புனல்வாது வென்று என்பைப் பெண்ணாக்கிய சண்பைச் செல்வரும், கற்றோணியேறிக் கபாடந்திறந்து நீற்றறையில்வேவாது வீற்றிருந்த யோகீசரான வாகீசரும், கல்லைப்பொன்னாக்கிக் கடவுளைத்தூதாக்கி முதலைவாய்ப்பட்ட புதல்வனை மீட்ட தம்பிரான்றோழராகியநம்பியாரூரரும் அவ்வவ்வமயங்களிற் பாடிய அருட்பாத் தொகையே தேவாரம் எனப்படும். இம்மூவர் பாடலுமன்றி மற்றெவர்பாடலுந் தேவாரம் எனப்படா. என்னை? ஊமைக்குரைபளித்து உத்தரவின்படி புத்தரைவென்ற மாதவச்செல்வராகிய வாதவூரடிகள், நரியைப்பரியாக்கி அரிமர்த்தனற்களித்த நம்பனார் எட்டிலெழுதப் படித்த பாட்டின்றொகை திருவாசகம் திருக்கோவை எனவும், திருமூலர் சொன்ன அருமந்தபாடல் திருமந்திரம் எனவும், ஆழ்வாராதியரருளிய திருமறைதிவ்விய நாலாயிரப் பிரபந்தம், திருவாய்மொழி யெனவும் பெயர் பெறுதலும் பிறவும் உண்மையினான் என்க.

இது வேதசிரசாகிய உபநிஷத்துக்களின் சாரமாயிருத்தலின் திராவிடோபநிஷத்தென்றும், தமிழ்வேதம் என்றுஞ் சொல்லப்படும்.

தேவாரம், திருவாசகம், திருக்கோவை, திருக்குறள், திருமந்திரம், வேதாந்தசூத்திரம் என்னுமிவையனைத்தும் ஒரேகருத்துடையனவாகலின் வேதம் எனப்படும் என்பதை "தேவர்குறளும்" என்னும் ஔவையார் வாக்காலறியலாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருளிச்செய்த தேவாரம் இருக்கு வேதசாரமாயும், திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த தேவாரம், யசுர்வேதசாரமாயும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரம், சாமவேதசாரமாயும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம், அதர்வணவேதசாரமாயும் உள்ளன. பதிகங்கள் சாகைகளாம். வேதத்தின் ஞானகாண்டத்திற்கூறப்படுஞ் சரியை,கிரியை, யோகம், ஞானம் என்னு நாற்பாதங்களுட் சரியாபாதத்தைத் தாசமார்க்கத்தி னின்று அப்பமூர்த்திகளும், கிரியாபாதத்தைப் புத்திர மார்க்கத்தினின்று சம்பந்தமூர்த்திகளும், யோகபாதத்தைச் சகமார்க்கத்தினின்று சுந்தரமூர்த்திகளும், ஞானபாதத்தைச் சன்மார்க்கத்தினின்று மாணிக்கவாசகசுவாமிகளும் விளக்கியருளினார்கள், இவர்களுள்ளே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முருகக்கடவுளினவதாரமாயுள்ளவர்; திருநாவுக்கரசுநாயனார் வாகீசமுனிவரதவதாரமாயுள்ளவர்;சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானதமுகார்ந்த சாயையாயுள்ளவர்;மாணிக்கவாசகசுவாமிகள் திருநந்திதேவரவதாரமாயுள்ளவர். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலிலும்,மாணிக்கவாசகசுவாமிகள் கடையிலும், மற்றையோர் இடையிடையிலுமாகப் பரம்பதியைச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இனி, சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரும் அருளிச்செய்த பாடற்றொகை ஓரிலக்கத்து மூவாயிரம் பதிகங்கள். அவற்றுளிறந்தனபோக மீந்திருப்பன எழுநூற்றுத்தொண்ணூற்றுச் சேடம். இவற்றைத் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவருளாலே அவர் மாணுக்கராகிய நம்பியாண்டார் நம்பி யென்பார், ஏழு திருமுறைகளாக வகுத்தருளினர். இவரே திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரம் என்பவற்றைச்சேர்த்து நான்குதிருமுறைகளாக்கி முன்னையவற்றோடு சேர்த்துத் திருமுறை பதினொன்றெனச் செய்தார். மந்திரங்கள் ஏழுகோடியாயிருத்தலுக்கேற்பத் திருமுறைகளையும் முதலில் ஏழாகவமைத்து சேர்க்கையான மந்திரங்கள் பதினொன்றாதலால் அதற்கேற்ப அவ்வேழுடனே திருவாசக முதலாயுள்ள நான்கையுஞ் சேர்த்துப் பதினொன்றாக்கினர் என்க.

மக்கட்கெளிதிற் பயன்படுமளவில் இத்தமிழ் நான்மறையினை ஆரிய நான்மறையோடொப்பிட்டுப் பார்க்குமிடத்து ஆரியவேதம்,

பிறர்தீண்டிற்கழிக்கப்படுகின்ற கலம்போன்று அந்தணர் முதலிய முந்திய மூவருமே யன்றி, மற்றியாவருமோதற் குரியதன்றெனப் பால்கோடனின்று பொருள் பலபடத்தோன்றிப் படிப்பவர் தம்மை யிடர்ப்படுத்தா நிற்கும்; தமிழ்மறை, யாவரே தீண்டினும், யாதுதான் றொடினும் எவ்வாற்றானும் குற்றம்பற்றலின்மையின், வெறுத்தொதுக்கப்படாது போற்றிப் புனையப்படும் பொற்கலம் போன்று பின்னவரும், பெண்களும், பிறரும் ஆகிய பலரும்ஓதற்குரிய நடுநிலை நீங்கா நெடுவரம்பமைந்து வெளிப்பட்டப்பொருளையுளத்திடை விளக்கி, ஓதுவார் தம்மை நன்னெறிப்படுத்தும். "வேதமோதில் விழிநீர் பெருகி நெஞ்சநெக்குருகி நிற்பவர்க் காண்கிலம்." "திருவாசகமிங் கொருகாலோதில், கருங்கன் மனமுங்கரைந்துகக்கண்கள்,தொடுமணற்கேணியிற் சுரந்துநீர் பாய, மெய்ம்மயிர்பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி, அன்பராகுனரன்றி, மன்பதைபுலகில் மற்றையர் இலரே." "வேதமோதில் வருபயன் தருமம்;" "வாசகமோதின் வருபயன் முத்தி"

பசித்தானொருவன் புசிக்கவேண்டித் தென்னையைச் சார்ந்து அதன் சென்னியிற்போந்து அருங்கனி பறித்துந் தன்பெரும்பசி தணிந்தபாடின்றிக் கருவியெடுத்துக் கவசமுடைத்தபின்னரே யதனுள்ளிருக்கும் அமிர்தமுண்டு பசிநீக்கநின்றதேம்பழம்போல, வேதம், பொருளறியுமவாவோடு படிப்பவர்க்கு அப்பொருளெளிதிலகப்படாததாய் கடின பதங்களுடையதாய் அதிபிரயாசப்பட வல்லுநராயுள்ளார்க்கே அரிதிற்பொருள் தெரிக்கும்;

மேல் நின்றாயினும் கோல்கொண்டாயினும் பறித்தவுடன் உண்டு பசிதீர நின்ற மாம்பழம்போல, தமிழ்வேதம், அவர்க்கிலகு பதங்களால் விளங்கவைத்துப் பொருளை யெளிதில் வெளிப்படுத்தும்.

அன்னம், தேகம், இந்திரியம், அந்தக்கரணம் ஆதியவற்றையே பிரமமெனக் கூறிச் சோபானமுறையால் இறுதிக்கட் சிவபரத்துவங் கூறுவதாகலின், ஆரியமறை பிறர்வேண்டாதஎன்பு, நரம்பு, தோல், தசை முதலியவற்றோடு பொலிந்து அவசியம் வேண்டிய பாலைப் பக்குவமுள்ள அதிகாரியாகிய கன்றுக்குமாத்திரம் இரங்கிக்கொடுக்கும் பசுப்போலவும், அங்ஙனமின்றிச் சரியை, கிரியை, யோக, ஞானவழிகளினின்று பெறப்படும் பரம்பொருளையே துதித்தலின், அவ்வேத

சாரமாகிய ஆகமம் பசுவின் சாரமாகிய பால்போலவும் எவற்றினும் மேம்பட்ட ஞானமார்க்கத்தினின்று துரியாதீதப் பொருளொன்றையே புகழுந் தோத்திரரூபமா யிருத்தலின் அவ்வாகமசாரமாகிய தேவார திருவாசகங்கள் அப்பாலிற்றிரட்டிய நெய்போலவுமாம். இதனை,

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளூறுநெய்" என்பதனாலறிக.

ஆதலினாலே சுருங்கச் சொல்லல் முதலியவற்றினாலே ஆரிய வேதத்தினும் தமிழ்வேதம் அதிவிசேடமுடைத்து. இதுபற்றியன்றே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னு நால்வரில் அப்பரொழிந்த மூவரும் அந்தணரேயாக, அவர் தாமோதும் வேதமும் பயிலும் பாடையும் ஆரியமேயாக, சைவமார்க்க நிலைபேற்றின் பொருட்டுச் செய்த அதியற்புத உத்தம லீலைகளையெல்லாம்

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்." எனவும்

"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடு மதுபோலன்றி, துவென்று முளதா முண்மைப், பரபதமுந் தற்பரமும் பரனே யன்றிப் பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரி, னெரியினிடை வேவா தாற் றெதிரே யோடு மென்புக்கு முயிர்கொடுக்கு மிகுநஞ் சாற்றுங் கரியைவளை விக்குங்கன் மிதக்கப் பண்ணுங் கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே." என்றும்

ஆன்றோர் கூறியவற்றிற்கேற்பத் தமிழ்மொழியின் தெய்வத் தன்மையைச் சிறப்பிக்கு முகத்தானே அவ்வாரியமொழிந்து தமிழில் மொழிந்தனர்.

மாயாவிகாரப் பிரபஞ்சதோற்றமெல்லா மொடுங்குங் காலத்தவற்றைத் தன்னகத்தடக்கித் தான்மாத்திரந் தனித்துநிற்குஞ் சுத்தசிவ மித்தன்மைத்தென்பதனை உலகினர்க்குப் பகிர்முகத்தாற் காட்டிய போல, இசைத்தமிழிலக்கணமனைத்துமேலவே யிறந்துபாடாகவும் அவ்விசைத்தமிழுக் கிலக்கியமாய்த் தமிழ் மூன்றெனுந் தொகையிற் குறைவுபடாது நிறைவுபெற்று நிற்பதித்தமிழ்வேதமே.

தேவாரத்திருப்பதிகங்கட்குத் திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபிற் றோன்றியவோர் பெண்ணினிடத்திலே சிவாஞ்ஞையினாலே பண்ணடைவுபெற்று உலகினர் அன்று தொட்டின்று மென்றுமின்புறுமாறு வெளிப்படுத்தி நிலை நிறுத்தியவர் அபயகுலசேகரசோழமகாராசர்.

பண்:—நட்டபாடை, இந்தளம், காந்தாரம், காந்தாரபஞ்சமம், கௌசிகம், பழம்பஞ்சுரம், தக்கேசி, பியந்தைக்காந்தாரம், சாதாரி, புறநீர்மை, நட்டராகம், பஞ்சமம், கொல்லி, தக்கராகம், கொல்லிக் கௌவாணம், பழந்தக்கராகம், குறிஞ்சி, சீகாமரம், வியாழக் குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி, திருத்தாண்டகம், செவ்வழி, செந்துருத்தி என இருபத்து நான்காம்; இவற்றுள் முதலில் நின்ற பன்னிரண்டும் பகலில் ஓதற்குரியன; நடுநின்ற ஒன்பதும் இரவிலோதற்குரியன; இறுதியினின்ற மூன்றும் எக்காலத்தும் ஓதற்குரியன.

இத்தமிழ் வேதம் ஆன்மார்த்த பரார்த்த பூசைகட்கும், பாராயணத்திற்கும் உரிய மந்திரமாகும். தென்னாட்டிலுள்ள சிவாலயங்களிலெல்லாம் இத்தமிழ் வேதமே ஆரியவேதத்தோடொப்பவும் முந்தவும் உணர்ந்தோதப்படுகின்றது. இங்ஙனமாகச் செந்தமிழறியா வந்தணரொரு சிலர் தாந்தமிழ் வேதபாராயணஞ் செய்தால் ஓகோ !! இவர் "ஆரியமறியாப்பூரியர் எனப்பார்ப்பவர் பழிப்பரே" என்றும் சூத்திரனுஞ்சேர்ந்து பாடியிருப்பதாலதனை நாம் படித்தல்தகாதென்றுமொதுக்கி வேதபாதகராதலையும், பிரேதக்கிரியைகளிலும் மற்றை விசேடக்கிரியைகளிலும் சென்று தவச்சிறுவருவாய் கருதித்தம் பெருவாயோயாது கதறுகின்றவரும் அவ்வொன்றனாலேயே பிறராற் பெரிது மதிக்கப்பட்டுப் பரதேசங்களிலுலவுவோருமாகிய பட்டாரகர் சிலர் தமக்குக்கிடைத்தஅப்போதை யுத்தியோகவுயர் பதத்தையே பொருளெனமதித்து அப்பதநிலைபெறற்காரணம் எஜமானர் கேட்பத்தாம் பாடிய தேவாரமே யென்பதையும் மறந்து கோயில்களிற்றேவார திருவாசக பாராயணஞ் செய்வோர் ஓதுவார் எனப்படுவர் ஆதலால் எம்மையும் ஓதுவார் என்றுதானேயழைப்பார்கள். அதனால் நாமரிதிற்பெற்ற குருக்கட்பட்டத்திற் கிழுக்கு நழுகிநேரிடுமே என்றஞ்சி நாணிப்பாடாது செய்ந்நன்றி கொன்றனென்னும் றதையும், கந்தபுராணம் பாடியவர் கச்சியப்பசிவாசாரியர்

போலவும், பத்ததியபத்தியவர் அகோரசிவாசாரியர் என்றுற் போல வும், யாப்பிலக்கணவமைதி நூற்றிலொரு கூற்றைத்தானும் பொருந் தப்பெறாத வீண்பாக்களாலே இறந்தோரை "இறைவனடி" "உமை பதம்" "கயிலை" "பதநிழல்" "சிவலோகம்" முதலியவற்றைச் சேர்ந்தனரென்று புகழுநூலுடைய புதுச்சிவாசாரியர் சிலர் தாம் அரிதில் வருந்திச்சமைத்த அச்சாப்பாட்டில் தேவாரம் எனச் சில படைத்தலையும் காண்டல் மிகவெட்கமுந் துக்கமுமாம்.

தேவாரப்பண்ணறிந்து இசையொடுபாடாவிடத்துப்பயனில்லை. இதுபற்றியே"மூவர்செய் பநுவலது பகரவோ இசையுமில்லை"யென்று தேவார திருவாசகப்பொருளை ஐயந்திரியறவறிந்து தமது பாடலிலும் பலவிடங்களிற் குறிப்பாற் காட்டிய ஸ்ரீதாயுமான சுவாமிகளுங் கூறியுள்ளார்.

சைவர்களுக்குத் தமிழ்வேதம் தேவாரதிருவாசகங்கள். வைணவருக்குத் தமிழ்வேதம் நாலாயிரப்பிரபந்தம். சைவமரபிற் பிறந்தவரே யாயினும் தேவார திருவாசகங்களை ஓதாதவர்சைவராகமாட்டார். வைஷ்ணவமரபிற் பிறந்தவரே யாயினும் நாலாயிரப் பிரபந்தத்தை யோதாதவர் வைணவராகமாட்டார்." என்பது பெரியார் கொள்கை.

தேவாராதிகளைப் பண்ணோடும் பத்தியோடு படித்தும், செவிமடுத்தும், நேசித்தும், பூசித்தும் வழிபடுவோர் அறம், பொருள், இன்பம், வீடடைதலின் ஐயமேயில்லை. ஆதலின் சைவர்களெல்லாம் தேவாராதிகளைஎசாதும் பாடலிற்கூசாதும் தம்பட்டம்பரவப்பாடிய தன் பாடலாகிய வீண்பாடல்கட்குத் தேவாரப்பெயர் தரியாமலும் பத்தியோடவற்றைப்பாடித் துதித்தலும் வைணவர்கள் நாலாயிரப் பிரபந்த முதலியவற்றையோதியுய்தலும் அவ்வவர்க்கேற்ற கடனும்.

திரு. சோமசுந்தரப்பிள்ளை,

கொழும்பு.

சாந்தோக்கி யோபநிடதம்.

எ—ம் பிரபாடகம்.

சனற் குமார நாரத சம்வாதம்.

நாரதமுனிவர் சனற்குமாரமுனிவரிடம்போய் அவரைநோக்கிப் பகவானே! நீர் என்னைப்படிப்பித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்போது சனற்குமாரமுனிவர் அவரைநோக்கி "நீர் இதுவரையிற் கற்றுக்கொண்டவைகளை இப்போது எனக்குச் சொல்லல் வேண்டும். அவைகளை நானறிந்து கொண்டு பின்னர் அவற்றினும் விசேடமாயுள்ளவைகளை உமக்குச்சொல்லுவேன் என்றார். நாரதர் தாம் கற்றுக்கொண்டவைகளைச் சொல்வாராயினர். பகவானே! தமியேன் இருக்கு, யசுர், சாமம், அதர்வமென்னும் வேதங்களையும் படித்திருக்கிறேன். சிக்ஷை, கற்பம் முதலிய வேதாங்கங்களையும் படித்திருக்கிறேன். இதிகாச புராணங்களையும் படித்திருக்கிறேன். ஆயுர்வேதம், தநுர்வேதம் முதலியஉபவேதங்களையும் படித்திருக்கிறேன். மேலும் கணிதவித்தை, காருடவித்தை, உற்பாதவித்தை, இரசவித்தை, நீதிவித்தை முதலியவைகளையும் படித்திருக்கிறேன். ஆயினும் ஆன்மலக்கணத்தை அறிந்திலேன். சோகசாகரத்திலே அமிழ்ந்தி அலைகின்றேன். சோகசாகரத்தினின்றுந் தமியேனைக் கரையேற்றியருள்க. சோகமுடையவர்கள் நும்போலும்சாதுசனசகவாசத்தாற் காக்கப்படுவார் என்றுகேள்விப்பட்டு வந்தேனென்றார்.

அப்போது சனற்குமாரமுனிவர் நாரதமுனிவரைநோக்கி நீவிர் கற்றுக்கொண்டவைகளெல்லாம் நாம மாத்திரமேயாம். நாமத்தினை மாத்திரம் பிரமம் என்று வழிபடுவோன் இட்டசித்திகளை இயற்ற வல்லவனுவனென்றார். அப்போது நாரதமுனிவர் அவரைநோக்கி நாமத்தினும் விசிட்டமானது உளதா? என்றார். அப்போது சனற்குமாரமுனிவர் நாமத்தினும்விசிட்டமுள்ளவைகளாய்ச் சிலபொருள்களிருக்கின்றனஎன்றார். நாரதமுனிவர் அவைகளைச்சொல்லியருள்க என்றுபிரார்த்தித்தார். சனற்குமாரமுனிவர் சொல்வாராயினர்.

வாக்கு என்று ஒருபொருள் இருக்கின்றது. அதுநாமத்திலும் பெரியது. அது, நான்குவேதங்களையும் வேதாங்கங்களையும் உப

வேதங்களையும் மற்றைய வித்தைகளையும் சுட்டிக்காட்டுகின்றது; ஐம்பூதங்களையும் நால்வகைத் தோற்றங்களையும் நன்மைதீமைகளையும் மெய்ம்மை பொய்ம்மைகளையும் நல்லவர் தீயவர்களையும் அறிவிக்கின்றது இப்படியேஎல்லாவற்றையும் அந்தவாக்குத்தானே அறிவிக்கின்றது. வாக்குஎனப்படும் பொருளில்லையாயின் பாவபுண்ணியங்களையும், மெய்ம்மைபொய்ம்மைகளையும், தக்கார்தகவிலர்களையும் பிறவற்றையும் அறிந்துகொள்ளுவதில்லை. ஆதலால் வாக்கினை விசிட்டமுடைய பொருள்என்று அறிந்துகொள்க. வாக்கினை வழிபடுவோன் வாக்குலகத்தைஅடைவான் என்றார். நாரதர் அவரைநோக்கி வாக்கினும் விசிட்டமுடைய பொருள்யாதென்றார். சனற்குமாரர் சொல்வாராயினர்.

மனம்என்று ஒருபொருள் இருக்கின்றது. அதுசத்தியமாக வாக்கினும் பெரியது. இருநெல்லிப்பழம் ஒருகைக்குள்ளே அடங்குமாறுபோல நாமம், வாக்குஎன்னும் இரண்டும் மனத்துள்ளே அடங்கி விடுகின்றன. ஒருவன், மனத்திலே விரும்பும் வித்தையைஅடைகிறான். மனத்திலேவிரும்பிய செயலைச்செய்கிறான், மனத்திலேவிரும்பிய பதங்களைப்பெறுகின்றான். ஆதலின்மனமேபிரமம் என்றுவழிபடுக. மனத்தைவழிபடலால் மனவுலகம் அடையப்படும்.

மனத்திலுஞ் சங்கற்பம் விசிட்டமுடையது. சங்கற்பத்தினுஞ் சித்தம் விசிட்டமுடையது. சித்தத்திலும் தியானம்விசிட்டமுடையது. தியானத்தினும விஞ்ஞானம் விசிட்டமுடையது. விஞ்ஞானத்தினும் பெலமேபெரியது. பெலத்தினும் அன்னம் விசிட்டமுடையது. அன்னத்தினும் சலம் விசிட்டமுடையது என்றுஇங்ஙனம் கூறிச்சென்று பிராணனேஅதிவிசிட்டமுடையது என்றுமுடித்தார். நாரதமுனிவரும் திருப்தியடைந்தனர்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

ஐவன்ஹோ.

(172-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஐரோப்பா தேசத்துக் கிறிஸ்துவர்கள் யாவராலும் ஒருங்கே வெறுத்துத் தள்ளப்பட்ட யூதமதத்தைச் சேர்ந்த இவ் ஐஸாக்கின் சமீபத்தில்சென்று, அக்கிழவன் கையைப்பிடித்துஅழைத்துத் தன் ஆசனத்தில் உட்கார்த்திவைத்தான். வைத்ததும் அக்கிழவனுடைய துணிகளை எல்லாம் பிழிந்து உலர்த்திக் கொடுத்து கொஞ்சம் குளிர் காய்ந்ததும், மடைப்பள்ளியிலிருந்து கொஞ்சம் ரொட்டியும் நல்ல திராட்சை ரசமும் கொண்டுவந்து கொடுத்து சாப்பிடும்படியாய் உபசரித்துவிட்டுப் பக்கத்திலிருந்த ஒரு அறைக்குட்சென்றான்.

இதற்குள்ளே குதிரைவீரனும் சன்னியாசியும் அனேக சமாசாரங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். குதிரைவீரன் புண்ணிய க்ஷேத்திரத்தில் சாரசர்களுக்கு தான்செய்த வீரச்செய்கைகளையும் மற்றைய நார்மன்வீரர்கள் செய்கைகளையும் வியந்துகூறியதோடு ரிச்சர்ட் அரசன் தன்னோடு கூட அழைத்துவந்த ஸாக்ஸன் வீரர்கள் நன்றாய் வீரப்போர் புரிந்தார்கள் என்றும், ஆனாலும், நார்மன் வீரர்களே முதல்தரமென்றும் பெருமை பாராட்டிக்கொண்டான்.

உடனேவெகு கோபத்தோடும் உக்கிரத்தோடும் "நார்மன் வீரர்களா முதல்தரமான வீரர்கள்?" என்றுஒருசத்தம் கேட்டது. அஃதென்னவென்று எல்லாரும் சுற்றிப்பார்த்தார்கள். உடனே பரதேசி வழிப்போக்கன் முன்னிலும் அதிகவேகமாய் ஆவேசத்தோடு "ரிச்சர்ட் அரசன்கூடக் கொண்டுவந்த ஸாக்ஸன்குதிரை வீரர்கள்தான் நார்மன்வீரரைப் பார்க்கிலும் பலத்திலும் வீரத்திலும் தீரத்திலும் முதன்மைபெற்றவர்கள். நான்சொல்வது முழுவதும் உண்மையென்று குதிரைவீரனான கில்பர்ட்டுக்கே பாலஸ்தீனாவில்நடந்த சங்கதிகளால் நன்றாய்த்தெரியுமே" என்றான்.

இதைக்கேட்டவுடன் கில்பர்ட்டுக்கு வெகுகோபமும் அகங்காரமும் வந்துவிட்டது. ஆனால் கிழவனாகிய ஸிட்ரிக்குக்கோ சுயஜாதியான ஸாக்ஸர்களின் பெருமையைப் பற்றியும் அவர்கள்புறத்திற் காட்டிய வீரத்தைப்பற்றியும் கேட்கக் கேட்க ஒருவிதமான ஆனந்

தமும் பெருமையும் உண்டாயிற்று. அந்தப்பரதேசி ஸாக்ஸன்வீரர்களில் மிகப்பிரசித்தி பெற்றவர் பேர்களையும் அவரது வீரச்செயலையும் தனித்தனி விவரிக்கப்புகுந்து, நார்மன்வீரர்கள் ஸாக்ஸன்களோடு செய்த போலிச்சண்டையில் தோல்வியுற்றதையும் சொன்னான். மேலும், கில்பர்ட்டை வெருகரேமாய் உற்று நோக்கித் தனது சட்டை மார்ப்பையினின்றொருஅழகான தந்தப்பெட்டியைஎடுத்துத் திடீரென்று மேஜையின்மேல் எல்லாரும் பார்க்கும்படி வைத்து, "ஐவன்ஹோ மாத்திரம் பாலஸ் தீனுவிலிருந்து ஜாக்கிரதையாய் வந்துசேர்ந்திருந்தால், கட்டாயம் இந்த பிரசித்திப்பெற்ற கில்பர்ட்டோடு குதிரையேறிக்குஸ்திசெய்யும்படி அவனைநான் சொல்லுகிறேன். அப்படி இவன் அவனோடு செய்வானேயானால் ஐவன்ஹோவே கட்டாயம் வெற்றிபெறுவான். இது திண்ணம். இதற்குப்பந்தயமாக இந்தப் பெட்டியை வைக்கிறேன்" என்றான்.

"நல்லபந்தயம் வைத்திருக்கிறாய். நிரம்பநன்றாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே தன்கழுத்திலிருந்த விசேஷவிலைபெற்ற ஒருதங்கச் சங்கிலியை எடுத்து மேஜையின்மேல் கில்பர்ட்வைத்து "இதைப் பந்தயமாக நான் வைத்திருக்கிறேன். இப்பந்தயஅடமானத்தை அப்மோர்சன்னியாசியிடம் பொதுக்கட்டுகிறேன். இந்தஐவன்ஹோ மாத்திரம் இங்கிலாண்டில் கால்வைத்ததும் குதிரைவீரனாகிய என்னோடு குஸ்திச் சண்டைக்கு வர வேண்டும். அவன் அப்படி நான் குஸ்திக்குக் கூப்பிட்டதும் வராவிட்டால் இந்தத்தேசம் முழுவதும் மாத்திரமேயன்றி ஐரோப்பாகண்டம் முழுவதும்குதிரைவீரர் அனைவருக்கும் தெரியும்வண்ணம் ஐவன்ஹோவைப் போல பயங்கொள்ளி இல்லையென்று எங்கும்பறை யறைவிப்பேன்" என்றான்.

இம்மாதிரி ஒருவருக்கொருவர் பந்தயம்போட்டுக் கொண்டு எல்லாரும் இடத்தைவிட்டு எழுந்து அவர்அவர்தங்கள் படுக்கையறைக்குச் சென்றார்கள்.

அத்தியாயம் ௨.

பரதேசியை ஸிட்ரிக்கின் வீட்டுச்சேவகன் அழைத்துஒருசிறு அறையைக் காண்பித்து "ஐயா இதில்நீங்கள் இராத்திரி படுத்துறங்கலாம்" என்றுசொல்லி விட்டுப்போனான். அந்தஅறை மிகச்சிறிய

தாயும் போதுமான அளவு அலங்கரிக்கப் பட்டதாயும் தட்டுமுட்டுச் சாமான்கள் அற்றதாயுமிருந்தது. மேலேகொஞ்சம் வைக்கோல்பரப்பப் பெற்ற ஒற்றைப்பலகையும் அதன்மேல்ஒரு மெத்தைஆட்டுத் தோல் போர்த்தப்பெற்றும்இருந்தது. இவ்விதமாக அந்தப்பரதேசியினுடைய பள்ளியறைக்குப்பக்கத்தில் ஒருசிற்றறையில் ஐஸாக் கென்னும் யூதனுக்குப் படுக்கை கொடுக்கப்பட்டது. பரதேசியின்அறைக்குட் சென்ற கொஞ்சநேரத்திற் குள்ளாக, அவ்வீட்டு வேலைக்காரிகளுள் ஒருத்திவந்து அவனைநோக்கி " ஐயா! எங்கள் எஜமானியான ரொவேனா சீமாட்டி தங்களோடு சிலவார்த்தை பேசவிரும்புகிறாள். தயவுசெய்து வரவேண்டும் " என்றாள்.

உடனே அவன் எழுந்துவேலைக்காரியைப் பின்தொடர்ந்துசென்றான். அங்கோரறையில் ஒரு உயர்ந்தஆசனத்தில் மூன்றுதாதியர்கள் பணிவிடை செய்யசிறப்புடன்வீற்றிருந்தமிகவும்அழகியஒருபெண்மணியைக் கண்டான். அவள் இலக்குமி போலவும் ரதிபோலவும் இவ்வுலகத்தை ஆளப்பிறந்த ஒரு அரசிபோலவும் காணப்பட்டாள். உள்ளே நுழைந்தவுடன் அப்பெண்மணி தன்னோடு கூட இருந்த தாதியை சற்றுநேரம் வெளியே போயிருக்கும்படி ஜாடைகாட்டிச்சற்றுநிதானித்து அவனைநோக்கி "ஐயா! பரதேசியாரே! இன்றுஇரவுசாப்பிடும் பொழுதுஎனக்கும் மற்றைவீட்டிலுள்ளஎல்லாருக்கும் மிக்கஅருமையான ஒருவீரனது அரியசெயலைவியந்துகூறினீரே. அங்ஙனம்கூறிய ஐவன்ஹோ வைப்பற்றி இன்னும்கொஞ்சம் நான் தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன். தங்களைப்பார்த்தால் அவனோடு நன்றாகப்பழகினவர் போலத்தோன்றுகிறது. நீங்கள்எப்பொழுது அவனைக்கண்டீர்கள்? எவ்விடத்தில் அவனைவிட்டுப்பிரிந்தீர்கள்? அவன்உடம்புசௌக்கியமாயிருக்கிறானா? சமீபத்தில் அவனுடைய க்ஷேமங்கள் தெரியுமா?" என்றுமிகுந்த விசாரத்துடன் வினவினாள்.

அதற்குப்பரதேசி "அம்மா! நீங்கள்கேட்கிற ஐவன்ஹோவைப் பற்றி அதிகம்தெரியாது. ஆனால்நான் பாலஸ்தீனாவுக்குச் சென்ற காலத்தில் அவனுடைய பகைவர்கள் மாத்திரம் அவனைநிரம்பவும் நிர்ப்பந்தித்தார்கள். ஆனாலும்அவன் அவற்றிற்கெல்லாம் ஈடுகொடுத்துக் கொண்டு வெற்றியோடு நின்றான். நான்இவ்வூரை விட்டுப்புறப்

படும் பொழுதுஅவனும் இங்கிலாந்துக்கு வரும் சமயமாயிருந்தது. ஆனால்இங்கே வந்தால் அவனுடைய வாழ்நாளைச்சுகமாய்க்கழிப்பதற்கான காரணங்கள் இருக்கின்றனவோ இல்லையோ என்பது என்னைக் காட்டிலும் தங்களுக்கே நன்றாகத்தெரியும்" என்று வருத்தத்துடன் சொன்னான்.

அதைக்கேட்டசீமாட்டி பெருமூச்சுவிட்டுக் கண்களில்நீர்பெருக "ஈசுவரா! நீ அந்தமகாபுருஷனைக்ஷேமமாய் இங்கிலாந்திற்கொணர்ந்து சேர்த்து இப்பொழுது சமீபத்தில் நடக்கப்போகிற குதிரைவீரர்களின் போலிச்சண்டையில்யுத்தம்செய்யும்படி அவனுக்குப்பலத்தைக் கொடுத்து என்னிஷ்டத்தையும் நிறைவேற்றிவைப்பாயாக!" என்று உடைந்தகுரலோடு பிரார்த்தித்துவிட்டு மறுபடியும் பரதேசியை நோக்கி "ஆம்; ஆம். பரதேசியாரே! நீங்கள் பார்த்தீர்களே. அப்பொழுது அவன் இளைத்திருந்தானா? அல்லது பருத்திருந்தானா? முகமெல்லாம் அலைச்சலினால் கறுத்துஉடம்பு இளைத்துப்போய் விட்டதா? முன்னிருந்ததற்கும் இப்பொழுது இருக்கிறதற்கும் அடையாளம் தெரியாதபடி யிருந்ததா? உங்களுக்குத் தெரிந்தவரையில் சொல்ல வேண்டும். ஏதோஇவைகளைப்பற்றிக் கேட்கிறேன் என்று பரிகசிக்கவேண்டாம். எனக்கு எப்போதும் அந்தஐவன்ஹோவேஎதிரே நிற்பது போலிருக்கிறது" என்றாள்.

அதற்குப்பரதேசி "ஆமாம். முதல்முதல் ஸைப்பிரஸில் இருந்து வந்ததைப் பார்க்கிலும் அவன்தேகம் நிரம்பஇளைத்தும் கறுத்தும்போய் விட்டதுமன்றி மனத்தில் ஏதோ பெரியவிசாரமிருப்பது போலவும் தோன்றிற்று" என்றான். ரொவேனாஅதைக்கேட்டு "ஆம் சகஜந்தான் என்னபண்ணுவன்?பாவம்! இங்கேவந்தாலும் அந்தவிசாரமென்னும் கடலைத்தாண்டக் கூடியசாதனங்கள் அமையுமோஎன்னமோ? எனக்குச் சந்தேகமாயும் பயமாயும்இருக்கிறது" என்று பெருமூச்செறிந்து, "ஐயா, பரதேசியாரே! நீங்கள் எனக்குத் தெரிவித்த இவ்வளவு சங்கதிக்கும் தங்களுக்கு நான் கைம்மாறு எதைத்தான் கொடுக்கமுடியும்? ஆயினும் இதைஎடுத்துக் கொள்ளுங்கள்" என்று ஒரு பவுனைக் கையில் கொடுத்தாள்.

பரதேசி தன் அறைக்குத் திரும்பிவந்துவிளக்குத்தண்டின்மேல், கையிலிருந்த விளக்கை வைத்துவிட்டு, பெரியஅவ்வறையின் மரக்கது

வைச் சார்த்தித் தாளிட்டுவிட்டுப்படுத்து அருணோதய மாகும்வரை அயர்ந்து நித்திரைபோனான். பிறகு எழுந்து ஈசுவரத் தியானஞ்செய்து விட்டு காலதாமதஞ்செய்யாமல் கதவைத் திறந்து தன்னறையை விட்டு வெளியேவந்து சத்தஞ்செய்யாமல் யூதன்ஐஸாக் படுத்துறங்கும் கட்டிலின் பக்கமாய்ச் சென்றான்.

கிழவன்மிகுந்த வருத்தத்துடன் அயர்ந்துநித்திரை செய்துகொண்டிருந்தான். ஏதோ திமிர்வாதக்காரன்போல் கைகால்களை உதைத்துக் கொண்டவண்ணமாய் "ஐயோ நான் பரமஏழை. பைசா கூடக்கிடையாது! சுகமற்றகிழவன். என்னைக்காப்பாற்ற வேண்டும். கொல்லக்கூடாது,' என்றுதூக்கத்தில் பிதற்றிக் கொண்டேயிருந்தான். பரதேசி வீண்போது போக்காமல் தன்கையிலிருந்த தடிக்கம்பினால் தட்டியெழுப்பினான். ஐஸாக் அலறிப் புடைத்துக் கொண்டு உடம்பில் நரைத்துப்போன மயிரெல்லாம் சிலிர்த்து நிற்கத், தன் போர்வைகளை வாரிச்சுருட்டிக் கொண்டுதன்முன் நின்றபரதேசியை எறிட்டுப் பார்த்தான்.

உடனேபரதேசி "நான்ஒன்றும் உன்னைச்செய்ய மாட்டேன். நான்உன்னைக் காப்பாற்றும்படி வந்திருக்கும் நண்பன் என்று நினை. இம்மாளிகையை விட்டுவேகமாய் புறப்பட்டு வெளியே போய்விடு. சீக்கிரமாய்ப் போகவேண்டும். நேற்றுஏழைகளைக் காப்பாற்றவென்று பட்டம் மாத்திரம் பெற்றுள்ள வீரனான கில்பர்ட், கூடத்தைவிட்டுச்செல்லும்போது தனது அடிமைகளைக் கூப்பிட்டுக் காலையில் நீ யெழுந்துபோகும் வழியை மறைந்திருந்து கவனித்துக் கொஞ்சதூரம் சென்றதும் உன்னைப்பிடித்துக்கட்டி பிலிப்பின் மாளிகைக்காவது பிராண்டிபோவின் மாளிகைக்காவது கொண்டுபோய் சிறையிலிட்டுவைக்கும்படி சாரஸன் பாஷையில் ஆக்ஞாபித்தபோது நான் பக்கத்திலிருந்தேன். எனக்குநன்றாக சாரஸன்பாஷை பேசவும் பேசுவதையறியவும் தெரியும். ஆகையால் உன்னைத் தப்புவிக்கும்படி இங்குவந்தேன்" என்றான்.

இதைக்கேட்டதும் யூதக்கிழவனுக்கு உண்டான அச்சத்திற்கும் நடுக்கத்திற்கும் ஓரளவில்லை. நாடிஎல்லாம் ஓய்ந்துவிட்டது. அடியற்றமரம்போல் அப்பரதேசியின் காலில்வீழ்ந்து மூர்ச்சித்துப்போய்விட்

டான். இதைக்கண்டபரதேசி, "ஐஸாக்! எழுந்திரு. நான்சொல்வதைக் கேள். இப்படிக்கிடந்து போதுபோக்க இதுகாலமில்லே. உனக்கு வந்திருக்கும் ஆபத்துமிகப்பெரியது. ஆகையால்உனக்குத் திகில்உண்டாவது நியாயமே. ஆனாலும்நான்உனக்குத் தப்பித்துப்போகும் வழியைக் காட்டுகிறேன். இந்தவீட்டை விட்டுஉடனே வெளியேபோய்விடு. நானேஉனக்கு இக்காட்டிலுள்ள ரகசியமான தனிவழிகளைக்காட்டுவதுடன், கூடவும்வந்து ஜாக்கிரதையாய் ஓர்இடத்தில் உன்னைக் கொண்டு போய்விடுகிறேன். சீக்கிரமாகப்புறப்படு. பிறகு ஏதாவது பெரியபிரபுக்கள் வீட்டில்தங்கி சாவதானமாய் இருக்கலாம். எங்கே பார்த்தாலும் யூதர்களே ரொக்கப்பணம் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்துவருகிறார்கள். அப்படிப்பட்ட கனவான்கள் வீட்டில் தங்கலாம்" என்றான்.

(இன்னும் வரும்)

S பஞ்சாபகேச சர்மா B. A.
Science Asst. Native High School, Kumbakonam.

பர்த்ருஹரி நீதிசதகம்.

(145-ம் பக்கத்தொடர்ச்சி.)

(3—வது) சௌரியப் படலம்.

22. பசியா லிளைத்தாலும், முதுமையால் மெலிந்திருந்தாலும், தேகமெலாம் தளர்வடைந் திருந்தாலும், கஷ்டதசையடைந்தாலும், களையேகுன்றிவிட்டாலும், உயிர்போகும்நிலைமைக்கு வந்துவிட்டாலும்,உயர்ந்தகௌரவ முடையவைகளில் முதன்மையானசிங்கமானது, மதயானையின் மத்தகத்தைப் பிளந்து, அதனின்றும் ஒருகைமாமிசமாவது, உண்ண விரும்புகின்றதே (யொழிய) உலர்ந்தபுல்லைத் தின்னுகின்றதா?

23. கொஞ்சம் ஊன் நீரால் நனைந்த எலும்பொன்று,—சதைப் பற்றேயில்லாததாயினும்,—அதுஒருநாய்க்கு அகப்பட்டால், அதைக் கொண்டு, அந்தநாய்எவ்வளவோ திருப்தியடைகின்றது. அதுவோ நாயின் பசியாற்றுவதற்குப் போதுமானதன்று. ஆனால்சிங்கமோ, ஒருநரிதன்மடியில்வந்து விழுந்தாலும் அதைத் தள்ளிவிட்டு, யானை

யைத் தான்சொல்லுகின்றது. தாழ்ந்தநிலைமை யடைந்தாலும் தன் பலத்துக்குத்தக்க பயனையே ஒவ்வொருவனும் விரும்புகின்றான்.

24. சோறுபோடுபவனெதிரில், நாயானது, வாலைக்குழைக்கின்றது; காலால்தரையைக் கீறுகின்றது; தரையில்வீழ்ந்து முகத்தையும் வயிற்றையும் காட்டுகின்றது ஆனால்உயர்ந்த யானையோ, கம்பீரமாய்ப் பார்க்கின்றது. அநேக நல்வார்த்தைகளின் பேரில்தான், உண்ணுகின்றது.

25. சுற்றிச் சுற்றிவரும் ஸம்ஸாரத்தில், இறந்தவன் எவன்தான் பிறக்கவில்லை? எவன்பிறவியால் அந்தக்குலமானது உயர்நிலையடைகின்றதோ அவன்தான் பிறந்தவன் (நற்பிறவியுடையவன்.)

26. பூங்கொத்துக்கு(ப்போல)ம், மனோதைரியமுடையோர்க்கும் இரண்டேபுகல்களுண்டு.—உலகத்தார் தலைமீது(தலைமையாய்) இருப்பது, அல்லதுகாட்டிலே கிடந்தழிவது.

27. பிருஹஸ்பதி முதலான வேறுஐந்தாறு உயர்ந்த கிருஹபதிகளிருக்கின்றார்களே. அப்படியிருக்க, அதிகவலிமையை எதிர்பார்க்கின்ற இந்த ராகுவானவன் அவர்களை விரோதிக்கவில்லை; தம்பி, பார்! தலைமாத்திரமுள்ள இவ்வசுரத்தலைவன்,—பகலுக்கதிபனானசூரியன், இரவுக்கு நாயகனான சந்திரன்— இவ்விருவர்களையே பருவங்கள்தோறும் பிடிக்கின்றான்.

28. பூமண்டலங்களை, ஆதிசேஷன் தன்படமாகிய பலகையால் தாங்குகின்றான். அவ்வாதிசேஷனை, ஆதிகூர்மம் எப்பொழுதும் தன் முதுகின் நடுவில் தாங்குகின்றது. அக்கூர்மத்தைக் கடலானது ஒரு மூலையில் அக்ஷபமாயமாய் யடைக்கிக் கொண்டிருக்கின்றது. அட! மகான்களின் சரித்திரமகிமை அளவிடக்கூடாததாயிருக்கின்றது.

29. கர்வத்தால் இந்திரன் தன்வஜ்ராயுதத்தைச் சுழற்றியடிக்க, அவ்வடிகளினின்று கிளம்பும் தீப்பொறிகளைத் தாங்கமாட்டாமல் உயிரையிழப்பதே நலம். அட! ஹிமயமலையின் புதல்வன் (மைநாக பர்வதம், தன்தகப்பன் (ஹிமயமலை) கஷ்டத்துக்கு இந்திரன் அடிபட்டுத் தவிக்கையில், தான்கடல் நீரில்ஒளித்துக் கொண்டது(கொஞ்சமேனும்) சரியன்று.

30. உயிரற்ற பொருளாயினும் சூரியகாந்தக் கல்லானது சூரியன் கால் (கிரணம்) பட்டமாத்திரத்தில் கோபி(ஜ்வலி)க்கின்றது. ஆகையால், சௌரியமுள்ளவன், பிறர்செய்யு மவமானத்தை யெவ்விதம் பொறுப்பான்?

31. சிங்கம், குட்டியாயினும், மதம்பெருகும் மத்தகங்களுடன் கூடிய யானைகளையே எதிர்க்கின்றது. பலவான்களுக்கு இதுபிறவிக் குணம். சௌரிய முடையோர்க்கு வயதொருகாரணமாகமாட்டாது.

4—வது செல்வப் படலம்.

32. ஜாதிமுறையென்பது பாதாளத்தில் தொலையட்டும், குணங்களென்பவை யதினும் கீழே மடியட்டும், ஒழுக்கமென்பது மலைமீது உருளட்டும். உறவினரெல்லாம் தீப்பட்டெரியட்டும் (நமக்கேவிரோதம்) கேடுவிளைவிக்கக் கூடியசௌரியத்தில் திடீரென்று இடிவிழட்டும். நமக்குப்பணம் மாத்திரம் இருந்தால் போதும். பணமில்லாவிடில் மேற்சொன்ன குணங்களெல்லாம் புல்போல் அற்பமானவைதானே ?

33. பணமுள்ளவனே நற்குலத்தோன், அவன்தான் பண்டிதன். அவனே எல்லாக்கலைகளையும் கற்றவன், அவன்தான் குணாகுணங்களை யறியக்கூடியவன், அவனேபேசுந்திறமுடையோன், அவன்தான் மிக்க அழகு வாய்ந்தவன்.—பணமுள்ள விடத்தில்தான், குணங்களெல்லாம் அமைகின்றன. (என்றுசொல்லப்படுகிறது.)

34. துராலோசனையா லரசனும், (விஷயப்)பற்றினால் சந்நியாசியும் அதிகமாகச்செல்வம் (இடங்) கொடுப்பதால் மகனும், (வேதமோதாத' தனால்)வேதியனும், கெட்டபுத்திரனால்குலமும், துஷ்டர்ஸகவாசத்தால் ஒழுக்கமும், குடியால்நாணமும், பார்வையில்லாத (தால்)வேளாண்மையும், பிரிந்திருப்பதால் அன்பும், பரஸ்பரம் நம்பிக்கையில்லாத (தால்)சிநேகமும், அநீதியால் ஸம்பத்தும், கொடையாலும் அஜாக்ரதையாலும் செல்வமும், அழிகின்றன.

[இதைஎன்னுடையஉத்தரவின்றி யாரும்எடுத்துஅச்சிடக்கூடாது]

R. வேஸதுநாராயணசர்மா B. A. B. L,